மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதற்கான கால்கோள் விழா நடந்து இப்போது திட்டப்பணிகள் நடந்து கொண்டிருக்கின்றன.

பாண்டலம் எரியிலுள்ள மதகுகன்கு

வினா எண். 74— திரு. சோ. கலித்தீர்த்தான்: மண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பாண்டலம் ஏரியில் உள்ள 2 பெரிய மதகுகள் பழுதாகி உள்ளதா?

(ஆ) ஆம் எனில் அதனை சீர் செய்ய அரசு எடுத்துள்ள நடவடிக்கை யாது?

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது: (அ) ஆம்

(ஆ) இதற்கான மதிப்பீடு அங்கீகரிக்கப்பட்டு, இப்போது பணிகள் மேற்கொள்ளப்பட்டு ஓரளவிற்கு முடியும் தருவாயில் இருக்கிறது.

திரு. சோ. கலிதீர்த்தான் : தலைவர் அவர்களே, நமது அமைச்சர் அவர்கள் இந்தப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டதாகச் சொன்னார்கள். நன்றி. இரண்டு மதகுகளில் ஒரு மதகின் பணி முடிக்கப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. இன்னும் ஒரு மதகு சீர் செய்ய வேண்டியிருக்கிறது. இதனால் சுமார் 350 ஏக்கர் நிலங்கள் சாகுபடி செய்யமுடியாமல் இருக்கின்றன. அந்த பணியை இந்த ஆண்டிலேயே செய்து முடிக்க அரசு உத்தர விடுமா?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது; தலைவர் அவர்களே. இன்னு இரண்டு, மூன்று மாதங்களில் அந்தப்பணியை முடித்து விடலாம் என்று அரசு கருதுகிறது.

உடைந்துப் போன ஆற்றங்கரைப்பட்டி ஆணையினை மீண்டும் கட்டும் திட்டம்

வினா எண். 75 திரு. வே. இரா. ஜெயராமன் மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வைகையாற்றில் கடந்த ஆண்டுகளில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கின்போது உடைந்து போன ஆத்தங்கரைப் பட்டி அணையினை திப்பரவு என்னுமிடத்தில் மீண்டும் கட்டும் திட்டம் அரசிடம் உள்ளதா?

1983 ஜனவரி 31]

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: (அ) மற்றும் (ஆ) ரூ. 21.20 லட்ச மதிப்பீட்டில் இத்திட்டத்தை நிறைவேற்றுவதற்கான செயற்குறிப்பு அரசின் பரிசீலனைக்கு வந்து இப்போது அதற்கும் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

திரு. ஆ. வெள்ளைச்சாமி : மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்திற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டதாக அமைச்சர் அவர்கள் கூறினார்கள். நன்றி. இதனால் எத்தனை ஏக்கர் நிலங்கள் பயன் பெறும்? பழைய ஆயக்கட்டுகள் இதிலே சேர்க்கப் பட்டிருக்கின்றதா? புதிய ஆயக்கட்டுகள் எவ்வளவு சேர்க்கப் பட்டிருக்கின்றன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தில் சுமார் 806 ஏக்கர் புதிய மற்றும் பழைய நிலங்கள் பயனடையும். ஆத்தங்கரைப் பட்டி அணையின் கீழ் வரும் 220 ஏக்கர் நிலங்களும் இந்தத் திட்டத்தில் புதியதாக சேர்க்கப்பட்டிருக்கின்றன.

தமிழ்நாட்டில் வெட்டியெடுக்கப்படும் கரும்பாறைகள்

*வினா எண். 76—திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் கள்ளத்தனமாக கரும்பாறையை வெட்டி எடுத்து ஏற்றுமதி செய்வதைத் தடுக்க அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: 1959-ஆம் ஆண்டு தமிழ்நாடு சிறு கனிம சலுகை விதிகள் மற்றும் இந்திய அரசின் 1957 ஆம் ஆண்டு கனிமங்களும் சுரங்கங்களும் (முறைப்படுத்துதல் மற்றும் மேம்படுத்துதல்) சட்டம், இவைகளில் அரசுக்கு அளிக்கப்பட்ட அதிகாரங்களைக் கொண்டு கள்ளத்தனமாக கரும் பாறைகளை வெட்டியெடுத்து ஏற்றுமதி செய்வதை அபராதம் விதித்து அல்லது நீதி மன்றங்களில் வழக்கு தொடுத்து அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கரும்பாறையை தனியார் வெட்டியெடுத்து ஏற்றுமதி செய்வதைத் தடைசெய்து அரசே ஏற்றுமதி செய்தால் அந்நியச் செலாவணி அதிகம் கிடைக்குமே, அரசு சொந்தப் பொறுப்பில் அவற்றை வெட்டியெடுத்து மெருகேற்றிக் வெளிநாடுகளுக்கு அனுப்பும் உத்தேசம் உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.